# 30 அக்டோபர் 2023 நடப்பு நிகழ்வு கேள்விகள்

**1) இந்தியாவின் முதல் செங்குத்து செயற்கை காற்று அமைப்பு அமைத்துள்ள இடம்**

a)ஜம்மு காஷ்மீர்

b)பஞ்சாப்

c)ஹிமாச்சல் பிரதேசம்

d)அருணாச்சலப்பிரதேசம்

**2) இந்தியாவின் முதல் பசுமை துறைமுகம்**

a) சென்னை

b) விசாகப்பட்டினம்

c) தூத்துக்குடி

d) ஹல்டியா

**3) தமிழ்நாடு மக்களின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை**

a)5.25 கோடி

b)6.11 கோடி

c)6.50 கோடி

d)7.05 கோடி

**4) 'காஜிண்ட்-2023'என்கிற ராணுவ கூட்டு பயிற்சி எந்த இருநாடுகள் இடையே நடைபெறவுள்ளது**

a)இந்தியா மற்றும் கஜகஸ்தான்

b)இந்தியா மற்றும் கிர்கிஸ்தான்.

c)இந்தியா மற்றும்கொசோவோ

d)இந்தியா மற்றும் கிரிபதி.

**5) இந்திய வீரரான சுமித் ஆண்டில் எந்த விளையாட்டை சேர்ந்தவர்**

a)வட்டு எறிதல்

b)ஈட்டி எறிதல்

c)குண்டு எறிதல்

d)சம்மட்டி எறிதல்

**6) "Lord of Wankhede" என்ற புத்தகத்தை எழுதியவர் யார்**

a) வெங்கடேஷ் பிரசாத்

b) வி.வி.எஸ்.லக்ஷ்மன்

c) திலீப் வெங்சர்கார்

d) ஆர்.கௌசிக்

**7) இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் அடிப்படையிலான ஜிகாபிட் பிராட்பேண்ட் சேவை தொடங்கியுள்ள நிறுவனம்**

a)ஜியோ

b)ஏர்டெல்

c)இஸ்ரோ

d)ஸ்பேஸ்எக்ஸ்

**8) 2022 ஆம் ஆண்டின் பாரா ஆசியா போட்டிகளில் இந்திய வென்ற மொத்த பதக்கங்களின் எண்ணிக்கை**

a)95

b)107

c)111

d)120

**9) உணவு விநியோகிக்கும் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு காப்பீடு திட்டம் வழங்கும் நிறுவனம்**

a) சோமாட்டோ

b) ஸ்விக்கி

c) டன்சோ

d)டெலிவெரோ

**10) சர்வதேச பராமரிப்பு மற்றும் ஆதரவு தினம்**

a)அக்டோபர் 27

b)அக்டோபர் 28

c)அக்டோபர் 29

d)அக்டோபர் 30

**விடைகள்**

1)விடை c)**ஹிமாச்சல் பிரதேசம்**

இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள பக்லோவில் உள்ள சிறப்புப் படைப் பயிற்சிப் பள்ளியில் (SFTS) ராணுவம் தனது முதல் செங்குத்து செயற்கை காற்று அமைப்பினை (VWT) அமைத்துள்ளது .சிறப்புப் படைகள் மற்றும் பாராசூட் வீரர்களின் பயிற்சி உள்கட்டமைப்பை அதிகரிக்க அமைக்கப்படுகிறது.அதிநவீன செயற்கை காற்று அமைப்பு பாராசூட் வீரர்களின் (CFF) திறன்களை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.ஒரு கட்டற்ற வீழ்ச்சி சிமுலேட்டராக செயல்படும் ராணுவம் செங்குத்து செயற்கை காற்று அமைப்பினை குறிப்பிட்ட வேகங்களில் காற்றின் நெடுவரிசையை உருவாக்குகிறது. இது பாராசூட் வீரர்களுக்கு எதுவாக வெவ்வேறு காற்று நிலைமைகளை ஒழுங்கமைக்கிறது.இந்த அமைப்பு ஒரு கட்டுப்படுத்தப்பட்ட சூழலை வழங்குகிறது பாராசூட் பயிற்சி பெறுபவர்கள் உண்மையாக வானில் இருந்து

கீழே விழும் நிலைமைகளை உருவகப்படுத்துவதன் மூலம் அவர்களின் திறன்களை மேம்படுத்த உதவுகிறது

2) விடை **c)தூத்துக்குடி**

தூத்துக்குடியில் அமைந்துள்ள வ .உ .சி துறைமுகத்தில் உள்ள கொள்கலன் முனையத் திட்டத்தை இந்திய பிரதமர் தொடங்கி வைத்தார். 2 மெகாவாட் (MW) காற்றாலை மற்றும் 5 மெகாவாட் சூரிய ஒளி ஆலை அமைக்கப்பட்டுள்ளன. இந்த முன் முயற்சிகளின் விளைவாக இந்தியாவின் முதல் பசுமை துறைமுகமாக வ .உ .சி துறைமுகம் அறிவிக்கப்பட்டது. பசுமை ஹைட்ரஜன் மையம் மற்றும் கடல் காற்றாலை எரிசக்தி மையம் உள்ளிட்ட பல்வேறு முதலீட்டு வாய்ப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 12 நிறுவனங்கள் கையெழுத்திட்டன.

3) **விடை b)6.11 கோடி**

தமிழகத்தின் வரைவு வாக்காளர் பட்டியலில் மொத்தம் 6.11 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இதில் 3.10 கோடி பெண்கள், 3.0 கோடி ஆண்கள், 8,016 பேர் மூன்றாம் பாலினத்தவர் ஆவர் .செங்கல்பட்டில் உள்ள சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் 6,52,065 வாக்காளர்களுடன் மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் உள்ளனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கீழ்வேளூரில்1,69,030 வாக்காளர்களுடன் மிகக் குறைவான வாக்காளர்கள் உள்ளனர். சென்னையில் அதிகமான மூன்றாம் பாலின வாக்காளர்கள் (1,118) உள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவொற்றியூர் தொகுதியில் அதிகமான 130 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர்.

4) விடை **a)இந்தியா மற்றும் கஜகஸ்தான்**

காஜிண்ட்-2023' கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்பதற்காக 120 பேர் கொண்ட இந்திய ராணுவம் மற்றும் இந்திய விமானப்படைக் குழு கஜகஸ்தான் புறப்பட்டுச் சென்றது. கஜகஸ்தானின் ஓட்டார் நகரில் வரும் அக்டோபர் 30-ஆம் தேதி முதல் நவம்பர் 11-ஆம் தேதி வரை இந்தப் பயிற்சி நடைபெற உள்ளது.இந்தியா- கஜகஸ்தான் இடையேயான கூட்டுப் பயிற்சி 2016-ஆம் ஆண்டு 'பிரபால் டோஸ்டைக்' என்ற பெயரில் தொடங்கப்பட்டது. பிறகு இது நிறுவன அளவிலாக மேம்படுத்தப்பட்டு ,'காஜிண்ட் பயிற்சி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.ஐக்கிய நாடுகள் சபையின் அதிகார வரம்பின் கீழ் செயல்படும் போது, தந்திரோபாயங்கள், போர்ப் பயிற்சிகள் மற்றும் நடைமுறைகளைப் பற்றி இரு தரப்பினரும் நுண்ணறிவைப் பெற 'காஜிண்ட்-2023 பயிற்சி' ஒரு வாய்ப்பை வழங்கும். இந்தக் கூட்டுப் பயிற்சியானது, நகர்ப்புறம் சார்ந்த மற்றும் நகர்ப்புற சூழல்களில் கூட்டு ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான திறன்கள், மீள்திறன் மற்றும் ஒருங்கிணைப்பை உருவாக்கும்..

5) விடை **b)ஈட்டி எறிதல்**

ஈட்டி எறிதலில் பாராலிம்பிக் சாம்பியனான சுமித் ஆன்டில் 2022 ஆசியா பாரா விளையாட்டில் F 64 பிரிவில் 73.29 மீட்டர் தூரம் எறிந்து தனது முந்தைய உலக சாதனையான 70.83 மீட்டர்களை முறியடித்து தங்கப் பதக்கம் வென்றார். சுமித் ஆண்டிலின் 73.29 மீ எறிதல் அவருக்கு தங்கப் பதக்கத்தை உறுதி செய்தது மட்டுமல்லாமல், அவரது திறமையையும் உறுதியையும் வெளிப்படுத்தியது. அவர் 2021 ஆம் ஆண்டில் கேல் ரத்னா விருதையும் 2022 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதையும் வழங்கப்பட்டது .

6)விடை **d) ஆர்.கௌசிக்**

"Lords of Wankhede" என்ற புத்தகத்தை WV ராமன் மற்றும் ஆர் கௌசிக் எழுதியுள்ளனர்.இரண்டு உலகக் கோப்பை வெற்றிகளுக்கு இடையிலான 28

ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட்டின் பரிணாம வளர்ச்சியை இந்த புத்தகம் ஆராய்கிறது.

7)விடை **a)ஜியோ**

ரிலையன்ஸ் ஜியோ இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் அடிப்படையிலான ஜிகாபிட் பிராட்பேண்ட் சேவையான 'JioSpaceFiber' ஐ அறிமுகப்படுத்துகிறது. இது இந்தியாவில் உள்ள தொலைதூரப் பகுதிகளுக்கு அதிவேக இணைய அணுகலை விரிவுபடுத்துகிறது. இந்த செயற்கைக்கோள் பிராட்பேண்ட் சேவையின் முதன்மையான குறிக்கோள், இந்தியாவில் முன்பு குறைந்த மற்றும் தொலைதூரப் பகுதிகளுக்கு அதிவேக இணைய அணுகலை விரிவுபடுத்துவதாகும்.ஜியோ இந்தியாவில் மில்லியன் கணக்கான வீடுகள் மற்றும் வணிகங்களை ஆன்லைனில் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது,

8)விடை **c)111**

2022 ஆம் ஆண்டு சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் இந்திய வீரர்கள் 111 பதக்கங்களை (29 தங்கம், 31 வெள்ளி மற்றும் 51 வெண்கலம்) வென்று வரலாறு படைத்துள்ளனர். இந்திய பாரா தடகள வீரர்கள் 2022 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வென்ற 107 என்ற சாதனையை விட நான்கு பதக்கங்கள் அதிகமாக வென்றனர். 2022 ஆசிய பாரா விளையாட்டுகளில் இந்தியா ஐந்தாவது இடத்தைப் பிடித்தது.

முதல் நான்கு இடங்கள்:

1. சீனா 521 பதக்கங்கள் (214 தங்கம், 167 வெள்ளி, 140 வெண்கலம்)
2. ஈரான் 131 பதக்கங்கள் (44 தங்கம், 46 வெள்ளி, 41 வெண்கலம்)
3. ஜப்பான் 150 பதக்கங்கள் (42 தங்கம், 49 வெள்ளி, 59 வெண்கலம்) வென்றன.
4. தென் கொரியா 103 பதக்கங்கள் (30 தங்கம், 33 வெள்ளி மற்றும் 40 வெண்கலம்)

9)விடை a) **சோமாட்டோ**

சோமாட்டோ உணவு விநியோகிக்கும் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு காப்பீடு திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. மகப்பேறு தொடர்பான செலவுகளுக்கு நிதி உதவி வழங்குகிறது இந்த முயற்சி உணவு விநியோகிக்கும் தொழில்துறையில் இதுவே முதல் முறை ஆகும் . பிரசவச் செலவு மற்றும் தாய்மையின் போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் போன்ற பல்வேறு மகப்பேறு தொடர்பான செலவுகளை இந்த காப்பீட்டுத் திட்டம் உதவும் . இந்த நிதி உதவியானது பெண் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் சுமையை குறைக்கவல்லது .

10) விடை **c)அக்டோபர் 29**

அக்டோபர் 29 ஐ.நாவின் முதல் அதிகாரப்பூர்வ சர்வதேச பராமரிப்பு மற்றும் ஆதரவு தினமாகக் குறிக்கப்படுகிறது. இது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தொழிற்சங்கங்களால் நிறுவப்பட்ட பராமரிப்புக்கான முதல் சர்வதேச தினத்தின் பாரம்பரியத்தை அங்கீகரிக்கிறது பாலின சமத்துவத்தை முன்னேற்றுதல், ஆரோக்கியமான முதுமையை ஊக்குவித்தல் மற்றும் நமது சமூகங்கள் மற்றும் பொருளாதாரங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்வதில் கவனிப்பு மற்றும் ஆதரவின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காக இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது இதன் மூலம் 29 அக்டோபர் சர்வதேச பராமரிப்பு மற்றும் ஆதரவு தினமாக அனுசரிக்கப்படுகிறது .

***Copyright © by Adda247***
*All rights are reserved. No part of this document may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior permission of Adda247.*